## ஆகஸ்ட் - 25 - வெள்ளி

### பிரான்ஸ் தேச புனித லூயிஸ்

### “நீதிமான்களிடம் அன்பு கொண்டுள்ளார். திபா -146:8

**முதல் வாசகம் : ரூத்து 1:1,3 – 6,14 – 16, 22**

நீதித் தலைவர்கள் ஆட்சியாளராய் இருந்த காலத்தில். நாட்டில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. யூதாவிலுள்ள பெத்லகேம் ஊரைச் சார்ந்த ஒருவர் பிழைப்பதற்கென்று தம் மனைவியையும் மைந்தர் இருவரையும் அழைத்துக்கொண்டு மோவாபு நாட்டிற்கு சென்றார்.அவர்கள் மோவாபு நாட்டை அடைந்து அங்கு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அங்கே இருந்த காலத்தில் எலிமலேக்கு இறந்துபோனார். எனவே, நகோமி தம் இரு மைந்தரைத் தவிர வேறு துணையற்றவரானார். அவ்விருவரும் மோவாபு நாட்டுப் பெண்களை மணந்து கொண்டனர். ஒருவர் பெயர் ஓர்பா் மற்றவர் பெயர் ரூத்து. அவர்கள் பிழைக்க வந்து ஏறத்தாழப் பத்தாண்டுகள் ஆயின.பிறகு மக்லோனும் கிலியோனும் இறந்து போயினர். நகோமி தம் கணவரையும் இரு மைந்தரையும் இழந்து தன்னந் தனியராய் விடப்பட்டார்.நாகோமியின் சொந்த நாட்டில் ஆண்டவர் தம் மக்களைக் கருணையுடன் கண்ணோக்கி, அவர்களுக்கு உணவு கிடைக்கும்படிச் செய்தார். இதை நகோமி மோவாபு நாட்டில் இருந்தபோதே கேள்விப்பட்டார். எனவே, அவர் மோவாபு நாட்டை விட்டுப்போக ஏற்பாடு செய்தார். அதைக் கேட்டு அவர்கள் மீண்டும் கதறி அழுதார்கள். பிறகு ஓர்பா தம் மாமியாருக்கு முத்தம் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்றார். ஆனால் ரூத்தோ பிரிந்துபோக மறுத்துவிட்டார். நகோமி அவரிடம், ”இதோ பார்! உன் ஓரகத்தி தன் இனத்தவரையும் தன் தெய்வங்களையும் நோக்கித் திரும்பிப் போய்விட்டாள். அவளைப் போல் நீயும் திரும்பிப்போ என்றார்.அதற்கு ரூத்து, ”உம்மோடு வராமல் உம்மை விட்டுப் பிரிந்து போகும்படி என்னை நீர் வற்புறுத்த வேண்டாம். நீர் செல்லும் இடத்திற்கே நானும் வருவேன் உமது இல்லமே எனது இல்லம் உம்முடைய இனமே எனது இனம் உம்முடைய தெய்வமே எனக்கும் தெய்வம். இவ்வாறு நகோமியும் அவர் தம் மருமகளான மொவாபியப் பெண் ரூத்தும் அந்நாட்டை விட்டுத்திரும்பி வந்தனர். அவர்கள் பெத்லகேம் ஊர் வந்து சேர்ந்தபோது, வாற்கோதுமை அறுவடை தொடங்கியிருந்தது.

**பதில்பாடல் :** என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு

**நற்செய்தி : மத்தேயு 22 : 34- 40**

அக்காலத்தில் இயேசு சதுசேயரை வாயடைக்கச் செய்தார் என்பதைக் கேள்விப்பட்ட பரிசேயர் ஒன்றுகூடி அவரிடம் வந்தனர்.அவர்களிடையே இருந்த திருச்சட்ட அறிஞர் ஒருவர் அவரைச் சோதிக்கும் நோக்கத்துடன்,”போதகரே, திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?” என்று கேட்டார்.அவர், ”உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.”இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை.”உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக” என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை.திருச்சட்ட நூல் முழுமைக் கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன” என்று பதிலளித்தார்.

**தியானம்:** உலர்ந்த எலும்புகள் போன்ற எமது வாழ்விற்கு இறை ஆவியின் வல்லமை எனப்படும் உயிர் மூச்சு அருளப்படாவிட்டால் எதுவுமே செய்வதற்கு நாங்கள் அருகதை அற்றவர்கள். இறை ஆவியின் வல்லமையானது பாவக்கட்டுக்களிலிருந்து எம்மை விடுவித்து இறைவனை அன்பு செய்ய எம்மைத் தூண்டுகின்றது. இன்றைய நற்செய்தியிலும் இறைமகன் இயேசு அன்பின் மகத்துவத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றார். நன்மைகள் செய்பவரைக் குற்றம் சுமத்துவதும் ஒருவரை ஒருவர் நாம் அன்புசெய்ய மறுத்ததும் இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. “நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியோ” (தொடக்க நூல் 4:9) என ஏதேன் தோட்டத்திலேயே கேள்விக்கணை எழுப்பிய காயீனின் புதல்வர்கள் நாங்கள். அன்றைய பரிசேயர் கூட்டத்தில் ஒருவராக நின்று இறைமகன் இயேசுவிடமும் “திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது” என தொடர்ந்து கேள்விகேட்டோம். இவ்வாறு நன்மைகள் செய்பவர்களில் குறை கண்டுபிடிக்கும் எமது மனநிலை எம்மைத் தொடர்கின்றது. எனவே “உன் முழுமனத்தோடும் முழு உள்ளத்தோடும் ஆண்டவனை அன்புசெய்” என அழைக்கும் அவரது குரலுக்குச் செவிமடுப்போம். “உன்மீது அன்புகூர்வதுபோல உன் அடுத்தவன்மீதும் அன்புகூர்வாயாக” என்று கூறியதற்கிணங்க எமது வாழ்க்கையை மாற்றியமைப்போம். அப்போது உலர்ந்த எலும்புகளான எமது வாழ்விலும் இறை ஆவியின் வல்லமை பொழியப்படும். நாங்களும் அன்பு செய்கிறோம் என்பதனை விடுத்து அன்புசெய்து வாழ்ந்து காட்டுவோம். எம் தவறுகளை மறைக்க மற்றவர்களில் பிழை கண்டுபிடிக்கும் தன்மையை மறப்போம். நாம் இறைவனையும் எமது அடுத்தவரையும் அனுதினமும் அன்புசெய்ய அழைக்கப்பட்டுள்ளோம். அப்படி வாழுவோமாயின் இவ்வுலகில் சட்டங்களும் அவற்றை நெறிப்படுத்த நீதிமன்றங்களும் உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமா? எனவும் நாம் சிந்திக்கலாம்? எனவே பாவிகளான எமக்கு நிபந்தனையற்ற விதத்தினில் தமது அன்பினை இறைவன் வழங்குவது போன்று நாமும் அடுத்தவருக்கு அதனை மாசுமறுவற்ற வித்தினில் வழங்குவோம். ஏனெனில் அன்பு எனப்படுவது இலவசக் கொடையாகும்.